**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 15/2016**

**வாதி தரப்பு சாட்சி-2 சுப்பையா திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் தரகம்பட்டியில் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் 60 வருடமாக வசித்து வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பெரியசாமி பண்டாரத்திற்கு பாத்தியப்பட்டது. பெரியசாமி பண்டாரத்திற்கு 4 பேர் வாரிசுகள் ஆவார்கள். பெரியசாமிக்கு முன்பு தாவா சொத்து யாரிடம் இருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. என் மனைவியின் பிறந்த நாள் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 6 பிள்ளைகள். என் 6 குழந்தைகளின் பிறந்தநாள் தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. பெரியசாமிக்கு அண்ணன் இருக்கிறாரா என்றால் இல்லை. பெரியசாமிக்கு முத்துசாமி பண்டாரம் என்ற சகோதரர் இருந்தாரா என்றால் ஞாபகமில்லை.

2) தாவா சொத்துக்கள் பெரியசாமி பண்டாரத்துக்கும், முத்துசாமி பண்டாரத்துக்கும் சேர்த்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுந்தரநாதன் பெரியசாமி பண்டாரத்திடம் இருந்து எப்போது சொத்தினை வாங்கினார் என்றால் ஞாபகமில்லை. சுந்தரநாதனுக்கு யார் சொத்தினை எழுதிக்கொடுத்தது என்றால் பெரியசாமி பண்டாரம் எழுதிக்கொடுத்தார். பெரியசாமி பண்டாரத்துடன் சேர்ந்து வேறு யாராவது சுந்தரநாதனுக்கு கிரையம் கொடுத்திருந்தால் அது செல்லாதா என்றால் அதுபற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள விபரங்கள் தெரியாமலேயே சாட்சிக் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். தற்போது பெரியசாமி மற்றும் முத்துசாமி பண்டாரத்தின் வாரிசுகள் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா மற்றும் சிட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சுந்தரநாதன் பெயரில் உள்ளது.

3) தாவா சொத்திற்கு மின் இணைப்பு மற்றும் வீட்டுவரி ரசீது உள்ளதா என்றால் உள்ளது. நாகப்பபிள்ளைக்கு சுந்தரநாதன், ஆனந்த் என்ற இரண்டு மகன்களா என்றால் மூன்று மகன்கள். தனபால் என்ற மகனும் உள்ளார். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொன்னது என்றால் சண்முகம் சொல்லி

வழக்கறிஞர் சொன்னார். நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் முதல்விசாரணையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 15 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாயத்து நடைபெற்றதா என்றால் ஞாபகமில்லை. நான் சண்முகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**